# பங்குதாரர்களுக்கான
# நிர்வாக வழிகாட்டி


| உள்ளடக்க அட்டவணை | | பக்கம் |
|---|---|---|
| A | எப்படி தொலைவிலிருந்து ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்கேற்பது | 1 |
| B | எப்படி வாக்களிப்பது | 3 |
| C | ஆண்டு பொதுக்கூட்ட செயலுரிமை படிவத்தை எப்படி தாக்கல் செய்வது | 4 |
| D | ஆண்டறிக்கை மற்றும் ஆண்டு பொதுக்கூட்ட ஆவணங்களைப் பெறுவது எப்படி | 5 |

# பங்குதாரர்களுக்கான நிர்வாக வழிகாட்டி

## A. எப்படி தொலைவிலிருந்து ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்கேற்பது

1. தொலைவிலிருந்து பங்கேற்கும் மற்றும் மின்னியல் வாக்களிக்கும் ("RPEV") வசதிகள் கீழ்காணும் நபர்களுக்கு வழங்கப்படுகிறது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

   (i) **தனி அங்கத்தினர்கள்;**
   (ii) **நிறுவன பங்குதாரர்கள்;**
   (iii) **ஒப்புச்சான்றுடைய முன்மொழியப்பட்டவர்கள்; மற்றும்**
   (iv) **விலக்களிக்கப்பட்ட ஒப்புச்சான்றுடைய முன்மொழியப்பட்டவர்கள்;**

2. நிகழ்நிலை கூட்டத்தில், நிர்வாகக் குழுவிற்கான கேள்விகளை https://web.lumiagm.com வழி அனுப்புவதோடு. தீர்மானங்களுக்கான வாக்களிப்பையும் நிகழ் நேரத்தில் செய்யலாம்.

   பங்குதாரர்கள், ஆண்டு பொதுக்கூட்ட தீர்மானங்கள் மற்றும் 2020 ஆண்டறிக்கை குறித்த தங்கள் கேள்விகளை 30 ஏப்ரல் 2021 தொடங்கி, 21 ஜூன் 2021, திங்கட்கிழமை, காலை 10.00-க்குள் நிர்வாககுழுவின் வலைத்தளமான, https://boardroomlimited.my வழி கீழ்காணும் படிநிலை 2-இல் குறிப்பிடப் பட்டிருக்கும் அதே பயனர் அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றைப் பயன்படுத்தி "SUBMIT QUESTION"-ஐ தேர்வு செய்து அனுப்பலாம். [ஆண்டு பொதுக்கூட்டத்துக்கு முந்தைய சந்திப்பின் கேள்விகள்].

3. ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்கேற்க, தங்களுக்குப் பயனர் அடையாளம் மற்றும் கடவுச்சொல் தேவைப்படும். கீழ்காணும் படிநிலை தாங்கள் பயனர் அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றைப் பெற உதவும்.

**படிநிலை 1**
**Boardroom Smart Investor Portal-இல் நிகழ்நிலை வழி பதிந்து கொள்ளவும் (முதல் முறை பதிவிற்கு மட்டும்.)**

[குறிப்பு: Boardroom Smart Investor Portal-இல் ஏற்கனவே பதிவு செய்திருந்தால், நீங்கள் மறுபதிவு செய்யத் தேவையில்லை; நேரடியாக படிநிலை 2-க்குச் செல்லலாம். (தொலைவிலிருந்து பங்கேற்பதற்கான பயனர் அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றைக் கோரி விண்ணப்பத்தை அனுப்பவும்)]

a. www.boardroomlimited.my என்ற வலைதளத்திற்குச் செல்லவும்.
b. பயனராக பதிவு செய்ய <<Login>> மற்றும் <<Register>>-ஐ சொடுக்கவும்.
c. பதிவினை நிறைவு செய்து அடையாள அட்டை (முன் மற்றும் பின் பகுதி) அல்லது பாஸ்போர்டின் மென் நகலைப் JPEG அல்லது PNG-இல் பதிவேற்றம் செய்யவும்.
d. இயக்கத்தில் உள்ள மின்னஞ்சல் முகவரியை உள்ளிட்டு, நிர்வாகக்குழுவின் சரிபார்ப்பு மின்னஞ்சலுக்குக் காத்திருக்கவும்.

   ஒரு வேலை நாளுக்குள் உங்கள் பதிவு சரிபார்க்கப்பட்டு உறுதிபடுத்தப்பட்டு அறிவிப்பு மின்னஞ்சல் அனுப்பப்படும்.

**படிநிலை 2**
**தொலைவிலிருந்து பங்கேற்பதற்கான பயனர் அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றைக் கோரி விண்ணப்பம் அனுப்புதல். (ஏற்கனவே Boardroom Smart Investor Portal பயனர் அனுமதி உள்ள பங்குதாரர்களுக்கு)**

தொலைவிலிருந்து பங்கேற்பதற்கான பதிவு **30 ஏப்ரல் 2021** தொடங்கும். தங்கள் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதி நாள் **21 ஜூன் 2021, காலை 10.00** மணி என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளவும். (ஆண்டு கூட்டத்திற்கு 48 மணி நேரத்திற்கு முன்பாக).

# பங்குதாரர்களுக்கான நிர்வாக வழிகாட்டி

**தனி அங்கத்தினர்கள்**

i. நீங்கள் உருவாக்கிய பயனர் அடையாளம் மற்றும் கடவுச்சொல்லைக் கொண்டு www.boardroomlimited.my-க்குள் நுழையவும்
ii. முதன்மை பட்டியலிலிருந்து "Virtual Meeting"-ஐ தேர்வு செய்து சரியான நிறுவன நிகழ்வினை, "DRB-HICOM Berhad 31st Annual General Meeting" என்பதைத் தெரிவு செய்யவும்.
iii. தங்களின் சி.டி.எஸ். கணக்கு எண்ணை உள்ளிடவும்
iv. நடைமுறை விதிகள் மற்றும் நிபந்தனைகளைப் படித்து ஒப்புதல் அளித்து தங்கள் விண்ணப்பத்தை அனுப்பவும்.

**நிறுவன பங்குதாரர்கள்**

i. உறுப்பினர் பெயர், சி.டி.எஸ் கணக்கு எண்ணோடு நிறுவன பிரதிநிதி நியமனச் சான்றிதழ் அல்லது விண்ணப்பம் அனுப்புவதற்கான செயலுரிமை படிவம் ஆகியவற்றைக் கொண்டு bsr.helpdesk@boardroomlimited.com-க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.
ii. செயலுரிமை பெற்றவரின் அடையாள அட்டை (முன் மற்றும் பின் பகுதி) அல்லது பாஸ்போர்ட்டினை JPEG அல்லது PNG ஒருங்கமைவின் ஒரு நகலோடு மின்னஞ்சல் முகவரியையும் அனுப்பவும்

**முன்மொழியப்பட்டவர்கள்**

i. உறுப்பினர் பெயர், சி.டி.எஸ் கணக்கு எண்ணோடு விண்ணப்பம் அனுப்புவதற்கான செயலுரிமை படிவம் ஆகியவற்றைக் கொண்டு bsr.helpdesk@boardroomlimited.com-க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.
ii. செயலுரிமை பெற்றவரின் அடையாள அட்டை (முன் மற்றும் பின் பகுதி) அல்லது பாஸ்போர்ட்டினை JPEG அல்லது PNG ஒருங்கமைவின் ஒரு நகலோடு மின்னஞ்சல் முகவரியையும் அனுப்பவும்

**மேல் குறிப்பிடப்பட்டுள்ள படிநிலைகளை முடித்த பிறகு:**

a. உங்கள் விண்ணப்பம் பெறப்பட்டதையும் அது சரி பார்க்கப்படுவதையும் குறித்து நிர்வாகக் குழுவிடமிருந்து அறிவிப்பு ஒன்றைப் பெறுவீர்கள்.
b. செயல்முறை செயலி உங்கள் விண்ணப்பத்தை ஆண்டு பொதுக்கூட்ட வைப்புப் பதிவோடு ஒப்பிடுவதோடு, நிர்வாகக் குழுவிடமிருந்து தங்களின் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டது அல்லது நிராகரிக்கப்பட்டது எனபதனைக் குறித்து மின்னஞ்சல் ஒன்றைப் பெறுவீர்கள்
c. ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தால், தொலைவிலிருந்து பங்கேற்பதற்கான பயனர் அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை மின்னஞ்சல் வழி நிர்வாகக் குழுவிடமிருந்து பெற்றுக் கொள்வீர்கள்.

இப்போது தாங்கள் ஆண்டு பொதுக்கூட்டத்தின் பங்கேற்பாளராக தயாராக உள்ளீர்கள். ஆண்டு பொதுக்கூட்டத்தில் கீழே விளக்கப்பட்ட முறையில் பங்கேற்கலாம்.

விண்ணப்பம் அனுப்புவதற்கான இறுதி நாள் **21 ஜூன் 2021, காலை** 10.00 மணி என்பதைக் கவனத்தில் கொள்ளவும். (ஆண்டு கூட்டத்திற்கு 48 மணி நேரத்திற்கு முன்பாக)

**பங்கு பதிவாளர்களிடமிருந்து எனக்கு எந்த அறிவிப்பும் வரவில்லை.**
உங்களுக்கு மின்னஞ்சல் வழி அறிவிப்பு வரவில்லை என்றால் தயவு செய்து கீழ்காணும் வழியில் நிர்வாகக் குழுவைத் தொடர்பு கொள்ளவும்:

உதவி தொடர்பு எண் +603 7890 4700; அல்லது
bsr.helpdesk@boardroomlimited.com-க்கு மின்னஞ்சல் அனுப்பவும்

## பங்குதாரர்களுக்கான நிர்வாக வழிகாட்டி

**படிநிலை 3**
**ஆண்டு பொதுக்கூட்ட தினத்தன்று Virtual Meeting Portal-இல் பதிகை செய்தல்**

[கூட்டத்திற்கான நேரடி இணைய பரப்பு மற்றும் நிகழ்நேர வாக்குப் பதிவு ஆகியவற்றின் இணைப்புத் தரம் தங்கள் இடத்தின் அகண்ட அலைவரிசை மற்றும் இணைய இணைப்பின் நிலைத்தன்மையையும் பெரிதும் சார்ந்திருக்கும் என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளுங்கள்]

a. நிகழ்நிலை கூட்டத்தின் இணைய முகப்பு 23 ஜூன் 2021, காலை 9:00 மணிக்கு (ஆண்டு பொதுக்கூட்டம் காலை 10:00 மணிக்குத் தொடங்குவதற்கு ஒரு மணி நேரம் முன்பாக) திறக்கப்படும்.
b. மின்னஞ்சலில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டிபடி பயனர் அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றைக் கொண்டு நிகழ்நிலை கூட்டத்தின் இணைய முகப்பில் நுழையவும். (மேலே உள்ள படிநிலை 2-ஐ பார்க்கவும்)
c. அந்தப் படிநிலை இணைய பரப்பின் வழி பார்ப்பது, கேள்வி கேட்பது மற்றும் வாக்குப் பதிவு செய்வது எப்படி என்று வழிகாட்டும்.
d. தாங்கள் பயன்படுத்தும் கருவி நல்ல செயல்பாட்டு முறையில் இருப்பதோடு முழுமையாக மின்னூட்டம் செய்யப்பட்டுள்ளது அல்லது மின் இணைப்பு கொண்டிருப்பதை உறுதிபடுத்திக்கொள்ளவும். தெளிவான ஒலியைப் பெறுவதற்கு காதுகேள் பொறியைப் பயன்படுத்த பரிந்துரைக்கப்படுகிறீர்கள்.
e. ஆண்டு பொதுக்கூட்டத்தை தலைவர் நிறைவு செய்த பிறகு, இணைய பரப்பு மற்றும் தகவல் முகப்பு ஆகியவற்றின் பயன்பாடு நிறுத்தப்படும்.

நீங்கள் கூட்டத்திலிருந்து அல்லது முகப்பு பதிகையிலிருந்து எப்போது வேண்டுமானாலும் வெளியேறலாம்.

### B. எப்படி வாக்களிப்பது?

1. Bursa Malaysia Securities Berhad-இன் முதன்மை பங்குச்சந்தைப் பட்டியல் தேவைகள் ஆவணத்தின் 8.29A பத்தியோடு இணங்கும் வண்ணம் வாக்களிப்பு நடத்தப்படும்.

   DRB-HICOM, Boardroom Share Registrars Sdn. Bhd.-ஐ வாக்குப் பதிவு நிர்வாகியாக மின் வாக்கின் (e-Voting) மூலம் வாக்குப் பதிவை வழி நடத்த நியமித்துள்ளதோடு, Sky Corporate Services Sdn Bhd-ஐ வாக்குப் பதிவு முடிவுகளை சரிபார்க்கும் ஆய்வாளராக நியமித்துள்ளது.

2. இந்த ஆண்டு பொதுக்கூட்டத்தில், மின் வாக்குப்பதிவு கீழ்காணும் கருவிகளின் வழி நடைபெறும்:

   a. தனிநபர் விவேக கைத்தொலைபேசிகள்;
   b. டேப்லெட் (Tablet); அல்லது
   c. மடிக்கணினி அல்லது தனிநபர் கணினி.

3. அங்கத்தினர்கள் மற்றும் செயலுரிமை பெற்றவர்கள் வாக்குப் பதிவு செய்வதற்கு இரண்டு வழிமுறைகள் உள்ளன:

   i. பதிவின்போது போது அனுப்பபட்ட மின்னஞ்சலில் கொடுக்கப்பட்டுள்ள க்யூ.ஆர் (QR) ஊடுகதிர் குறியீட்டினைப் பயன் படுத்தவும். **அல்லது**
   ii. https://web.lumiagm.com/ என்னும் இணைய முகவரிக்குச் செல்லவும்.

4. தலைவர் வாக்குப்பதிவு தொடங்குவதற்கான அறிவிப்பு செய்தவுடன் வாக்குப்பதிவு தொடங்குவதோடு, வாக்குப்பதிவை நிறுத்த தலைவர் அறிவிப்பு செய்யும் வரை வாக்குப்பதிவு திறந்திருக்கும்.

5. வாக்குப்பதிவு நிறுத்தப்பட்டவுடன் ஆய்வாளர்கள் வாக்குப்பதிவு முடிவு அறிக்கைகளைச் சரிபார்த்து முடிவுகளை அறிவிப்பர். தலைவர் அவர்கள், தீர்மானங்களுக்கான வாக்குப்பதிவு வெற்றிகரமான முறையில் நடைபெற்றதா இல்லையா என்பதை அறிவிப்பார்.

## பங்குதாரர்களுக்கான நிர்வாக வழிகாட்டி

### C. ஆண்டு பொதுக்கூட்ட பிரதிநிதி படிவத்தை எப்படி தாக்கல் செய்வது?

1. நீங்கள் 23 ஜூன் 2021 அன்று நடைபெறும் ஆண்டு பொதுக்கூட்ட ஒளிபரப்பில் கலந்துகொள்ள இயலாமல், அவைத் தலைவரை தங்களின் செயலாக்கம் உரிமை உடையவராக்க விரும்பினால், செயலாக்கம் உரிமை படிவத்தை www.boardroomlimited.my வலைதளத்தில் உள்ள "Boardroom Smart Investor Portal" மின்னியல் வழி அனுப்பவும்.

   ஆண்டு பொதுக்கூட்டம் நடைபெறுவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்னதாக விண்ணப்பம் அனுப்பபட வேண்டும். விண்ணப்பம் அனுப்புவதற்கு இறுதி நாள் 21 ஜூன் 2021, காலை 10:00 மணி.

   படிவத்தை மின்னியல் வழி அனுப்புவதற்கு விவரமாக வழங்கப்பட்டுள்ள கீழ்காணும் வழிமுறையைப் படித்து பின்பற்றவும்:

**படிநிலை 1**
**Boardroom Smart Investor Portal-இல் நிகழ்நிலை வழி பதிந்து கொள்ளவும்**
**(முதல் முறை பதிவிற்கு மட்டும்.)**

**பக்கம் 1-ஐ பார்க்கவும்**
குறிப்பு: Boardroom Smart Investor Portal-இல் ஏற்கனவே பதிவு செய்திருந்தால், நீங்கள் மறுபதிவு செய்யத் தேவையில்லை; நேரடியாக மின் செயலாக்க உரிமம் பதிவு செய்ய படிநிலை 2-க்குச் செல்லலாம்.

**படிநிலை 2 – eProxy பதிவு**

a. நிர்வாகக் குழுவின் வலைதளமான www.boardroomlimited.my வலைதளத்திற்குச் செல்லவும்.
b. தங்களின் பயனர் அடையாளம் (எ.கா. மின்னஞ்சல் முகவரி) மற்றும் கடவுச்சொல் கொண்டு பதிகைச் செய்யவும்.
c. "E-PROXY LODGEMENT"-க்குச் சென்று கூட்ட பட்டியலில்.
d. "DRB-HICOM 31st AGM"-ஐ தேடி "APPLY"-ஐ சொடுக்கவும்.
e. நடைமுறை விதிகள் மற்றும் நிபந்தனைகளைப் படித்து ஒப்புதல் அளிக்கவும்.
f. சி.டி.எஸ் கணக்கு எண் மற்றும் தங்களின் சார்பாக வாக்களிக்க தங்களின் செயலாக்கம் உரிமம் பெற்றவருக்கான/பெற்றவர்களுக்கான பாதுகாப்பு எண்ணிக்கையை உள்ளிடவும்.
g. தங்களின் செயலாக்கம் உரிமம் பெற்றவரை/பெற்றவர்களை அல்லது கூட்டத் தலைவரை நியமிப்பதோடு தங்களின் செயலாக்கம் உரிமம் பெற்றவருக்கான/பெற்றவர்களுக்கானத் தேவையான தகவல்களை உள்ளிடவும்.
h. தங்களின் வாக்குப்பதிவு கட்டளைகளை உள்ளிடவும் - சார்பாக (FOR) அல்லது எதிராக (AGAINST), இல்லையெனில் தங்களின் செயலாக்கம் உரிமம் பெற்றவர் தங்களின் வாக்கை முடிவு செய்வார்.
i. தங்களின் செயலாக்க உரிமம் பெற்றர்/பெற்றவர்கள் நியமனத்தை மீள்பார்வை செய்து உறுதிப்படுத்திய பின்பு "SUBMIT"-ஐ சொடுக்கவும்.
j. மின் செயலாக்க உரிம படிவ பெறுகை ஒப்பத்தை பதிவிறக்கம் செய்யவும் அல்லது அச்சிடவும்.

மாற்றுவகையாக, தங்களின் செயலாக்க உரிம படிவத்தை கீழ்காணும் முகவரியில் உள்ள பங்கு பதிவாளர் அலுவலகத்தில் கொடுக்கலாம்:

11th Floor, Menara Symphony,
No.5, Jalan Professor Khoo Kay Kim, Seksyen 13,
46200 Petaling Jaya, Selangor.

இப்படிவமும் ஆண்டு பொதுக்கூட்டம் நடைபெறுவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்னதாக அனுப்பபட வேண்டும். விண்ணப்பம் அனுப்புவதற்கு இறுதி நாள் 21 ஜூன் 2021, காலை 10:00 மணி.

**செயலாக்கம் உரிமத்தைத் திரும்பப் பெறுதல்**

செயலாக்கம் உரிமத்துக்கான பாரங்களை அனுப்பிய பின்னர் நீங்கள் வேறொரு நபரை பதிவதற்கோ அல்லது நீங்களே நமது மின்னியல் ஆண்டு பொதுக்கூட்டத்துக்கு வரவோ நினைத்தால், bsr.helpdesk@boardroomlimited என்ற அகப்பக்கத்துக்கு நீங்கள் முன்னர் பதிந்திருந்த செயலாக்கம் உரிமம் பெற்றவர்/பெற்றவர்களைத் திரும்பப் பெற எழுதி அனுப்ப வேண்டும். இது கூட்டத்துக்குக் குறைந்தபட்சம் 48 மணி நேரங்களுக்கு முன்னர் செய்யப்பட வேண்டும்.

# பங்குதாரர்களுக்கான நிர்வாக வழிகாட்டி

## D. ஆண்டறிக்கை மற்றும் ஆண்டு பொதுக்கூட்ட ஆவணங்களைப் பெறுவது எப்படி?

1. கீழ்காணும் ஆவணங்களின் நகல்களை நிறுவன வலைத்தளமான https://www.drb-hicom.com/investors/agm-31/ -இன் வழி பெறலாம்.

   i. 31 டிசம்பர் 2020-இல் நிறைவு பெற்ற நிதி ஆண்டு ஆண்டறிக்கை*
   ii. நிறுவன மேலாண்மை அறிக்கை 2020.
   iii. தற்போது உள்ள தொடர்முறை தொடர்புடைய குழு பரிவர்தனைகள் ("RRPT")-இன் பங்குதாரர்களின் உரிமைக் கட்டளையின் பரிந்துரைக்கப்பட்ட புதுப்பித்தல் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட புதிய பங்குதாரர்களின் வருவாய் அல்லது வர்த்தக இயல்பின் கூடுதல் "RRPT"-க்கான உரிமைக் கட்டளை தொடர்புடைய பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கை.
   iv. 31 வது ஆண்டு பொதுக்கூட்டத்திற்கான அறிவிப்பு.
   v. செயலாக்க உரிம படிவம்.

   * 2020-க்கான ஆண்டு ஆண்டறிக்கை, நிலைத்தன்மை அறிக்கை 2020-ஐ உள்ளடக்கியுள்ளது.

2. DRB-HICOM-இன் 31 டிசம்பர் 2020-இல் நிறைவு பெற்ற நிதியாண்டு ஆண்டறிக்கையின் அச்சிடப்பட்ட நகல் தேவைப்பட்டால், நீங்கள், www.boardroomlimited.my உள்ள பங்கு பதிவாளரின் விவேக முதலீட்டாளர் முகப்பின் வழி விண்ணப்பிக்கலாம்.

   "Investor Services" பட்டியலில் உள்ள "Request for Annual Report-ஐ" தெரிவு செய்யவும்

   அல்லது, எங்களின் பங்கு பதிவாளர்களை கீழ்காணும் வழியில் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம்.

   மின்னஞ்சல்: **bsr.helpdesk@boardroomlimited.com**

   தொலைபேசி: +603 7890 4700

**நோய் பரவல் இருக்கும் இக்காலகட்டத்தில் அஞ்சல்கள் அனுப்பும் செயல்பாட்டிற்கான தேவை அதிகரித்திருப்பதால் ஆவணம் சேர்பித்தலின் போது ஆவணம் கட்டுப்படுத்தப்பட்டோ அல்லது தாமதமாகவோ வந்தடையலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.**

நிகழ்நிலை வழி ஆண்டு பொதுக்கூட்டத்தை நடக்க இருப்பதை ஆவலோடு எதிப்பார்க்கிறோம். 31-வது ஆண்டு பொதுக்கூட்டத்திற்கு முன் தங்களுக்கு ஏதும் கேள்விகள் இருப்பின், கீழ்காணும் எண்களை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

Boardroom Share Registrars Sdn. Bhd.
தொலைபேசி எண்: +603 7890 4700

DRB-HICOM Corporate Secretarial Department
தொலைபேசி எண்: +603 2052 8935

**- நிறைவு -**